

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான தி. வேல்முருகன் அவர்கள் நிர்வாகிகளுடன் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களவைத் தேர்தல் அறிக்கையை பாராட்டி நன்றி தெரிவித்தார்.



சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை கோவில் பூசாரிகள் நலச்சங்கத் தலைவர் பி.வாசு, சந்தித்து தங்களது கோரிக்கைகளை ஏற்று அவ்வப்போது அரசாணைகள் வெளியிடுவதற்கு நன்றி தெரிவித்தும், நடைபெறும் தேர்தலில் தங்களது சங்கத்தினர் 40 தொகுதிகளிலும் பிரச்சாரம் மேற்கொண்டு வாக்கு சேகரிப்பதாகவும் தெரிவித்தனர்.



## 2024 நாடாளுமன்றத் தேர்தல் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

## கழக இளைஞர் அணிச் செயலாளர் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரிக்கிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**24-03-2024, ஞாயிற்றுக்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | பங்களாமேடு, தேனி, தேனி வடக்கு மாவட்டம். | தேனி |
| 2 | காலை 11.00 மணி | புதிய பேருந்து நிலையம் பிரிவு, பெரியகுளம், தேனி வடக்கு மாவட்டம். | தேனி |
| மதிய உணவு இடைவேளை | | | |
| 3 | மாலை 5.00 மணி | மணிக்கூண்டு, திண்டுக்கல், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம். | திண்டுக்கல் |
| 4 | மாலை 6.15 மணி | பேருந்து நிலையம் அருகில், நத்தம், திண்டுக்கல் மேற்கு மாவட்டம். | திண்டுக்கல் |
| 5 | இரவு 7.00 மணி | ஊமச்சிக்குளம், மதுரை, மதுரை வடக்கு மாவட்டம். | மதுரை |
| 6 | இரவு 7.45 மணி | புதூர், மதுரை, மதுரை மாநகர் மாவட்டம். | மதுரை |

**25-03-2024, திங்கள்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | மாலை 5.00 மணி | பெரியார் தூண், காந்தி சாலை, காஞ்சிபுரம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம். | காஞ்சிபுரம் |
| 2 | மாலை 6.00 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மார்க்கெட் அருகில், செய்யாறு, திருவண்ணாமலை வடக்கு மாவட்டம். | ஆரணி |
| 3 | இரவு 7.00 மணி | காமராஜர் சிலை, பழைய பேருந்து நிலையம் அருகில், வந்தவாசி, திருவண்ணாமலை வடக்கு மாவட்டம். | ஆரணி |
| 4 | இரவு 8.00 மணி | காமராஜர் சிலை அருகில், சேத்துப்பட்டு, திருவண்ணாமலை வடக்கு மாவட்டம். | ஆரணி |
| 5 | இரவு 9.00 மணி | பேருந்து நிலையம் அருகில், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |

**26-03-2024, செவ்வாய்க்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | காந்தி சிலை சந்திப்பு, திருவண்ணாமலை, திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 2 | காலை 10.45 மணி | பேருந்து நிலையம் அருகில், கூட்ரோடு, இறையூர், கலசப்பாக்கம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 3 | காலை 11.45 மணி | அம்பேத்கர் சிலை அருகில், செங்கம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 4 | மதியம் 12.30 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம். | திருவண்ணாமலை |
| மதிய உணவு இடைவேளை | | | |
| 5 | மாலை 5.00 மணி | ரயில்வே சந்திப்பு அருகில், கோடியூர், ஜோலார்ப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டம். | திருவண்ணாமலை |
| 6 | மாலை 5.45 மணி | பேருந்து நிலையம் அருகில், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம். | வேலூர் |
| 7 | இரவு 6.30 மணி | ராஜீவ் காந்தி சிலை அருகில், பைபாஸ் சாலை, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம். | வேலூர் |
| 8 | இரவு 7.30 மணி | பேருந்து நிலையம் அருகில், பேர்ணாம்பட்டு, வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 9 | இரவு 8.15 மணி | பேருந்து நிலையம் அருகில், குடியாத்தம், வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 10 | இரவு 9.00 மணி | பிரதான சாலை, பள்ளிகொண்டா, வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 11 | இரவு 9.30 மணி | மண்டித் தெரு, வேலூர், வேலூர் மாவட்டம். | வேலூர் |

**27-03-2024, புதன்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | பேருந்து நிலையம், ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 2 | காலை 10.45 மணி | முத்துக்கடை பேருந்து நிலையம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 3 | காலை 11.30 மணி | பேருந்து நிலையம் அருகில், வாலாஜா, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 4 | மதியம் 12.30 மணி | பேருந்து நிலையம் அருகில், சோளிங்கர் இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| மதிய உணவு இடைவேளை | | | |
| 5 | மாலை 5.00 மணி | கமலா திரையரங்கம் அருகில், திருத்தணி, திருவள்ளூர் மேற்கு மாவட்டம். | அரக்கோணம் |
| 6 | மாலை 6.00 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 7 | மாலை 7.30 மணி | மணிக்கூண்டு, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | திருப்பெரும்புதூர் |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 22–03–2024.



சேலம் கிழக்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் வாழப்பாடியில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதனையடுத்து கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மலையரசனை அறிமுகம் செய்து வைத்து பிரச்சாரம் மேற்கொண்டனர். இதில் சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., சேலம் நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளர் டி.எம். செல்வகணபதி, ரிஷிவந்தியம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ, உதயசூரியன் எம்.எல்.ஏ, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர ,பேரூர் நிர்வாகிகள், இந்தியா கூட்டணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சியில் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது. இதில் தி.மு.க. வேட்பாளர் மலையரசனை அமைச்சர் அனைவரின் முன்னிலையில் அறிமுகப்படுத்தினார், அருகில் எம்.எல்.ஏ.க்கள் வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன், மணிக்கண்ணன் மற்றும் இந்தியா கூட்டணி கட்சி மாவட்ட நிர்வாகிகள் ஆகியோர் உடன் உள்ளார்கள்.